# தமிழ் இலக்கிய நயம்
# முதலாம் தவணையை அடிப்படையாகக் கொண்ட பாட அலகுகளின் வினா விடை
# தரம் 11

தொகுப்பாசிரியர் - இரா. நிஷாந்தன்
ஆசிரியர்
கிளி/இராமநாதபுரம்

## சிலப்பதிகாரம் - கானல்வரி

### அலகு 01

✍ **குறு வினாக்கள்**

**1. சிலப்பதிகாரத்தின் ஆசிரியர் யார்?**

- இளங்கோவடிகள்

**2.கானல் வரி இடம்பெற்றுள்ள காண்டம் எது?**

- புகார்க் காண்டம்

**3.கோவலனும் மாதவியும் காணச் சென்ற விழா எது?**

- இந்திர விழா

**4. சிலப்பதிகாரம் தோற்றம் பெற்ற காலப்பகுதி யாது?**

- சங்கமருவிய காலம்

**5. திங்கள் மாலை வெண்குடையான் சென்னி செங்கோலது ஓச்சி..**

அ. திங்கள் என்பதன் கருத்து யாது?

- முழுமதி, சந்திரன்

ஆ. சென்னி எனப்படுபவன் யார்?

- சோழ மன்னன்.

**6. மன்னு மாலை வெண்குடையான்
வளையாச் செங்கோலது ஓச்சி..**

அ. மன்னு மாலை என்பதன் பொருள் யாது?

- நிலைத்த புகழ்மாலை

**7. உழவர் ஓதை மதகு ஓதை உடை**
**நீரோடை தண்பதங் கொள்..**

அ. உழவர் ஓதை என்றால் என்ன?

- உழவரது மகிழ்ச்சி ஆரவாரம்

ஆ. இவ்வடிகளில் எதனது சிறப்பு கூறப்பட்டுள்ளது?

- காவிரி நதியின் சிறப்பு

**8. வாழி அவன் தன் வளநாடு மகவாய் வளர்க்கும் தாயாகி..** இங்கு மகவாகவும், தாயாகவும் உருவகிக்கப்படுபவை?

மகவு – சோழநாடு
தாய் – காவேரி நதி

**9. மருங்கு வண்டு சிறந்தார்ப்ப மணிப்பூவாடை அது போர்த்துக்**
**கருங்கயல் கண் விழித்தொல்கி நடந்தாய் வாழி காவேரி..**

அ. இக் கூற்று யாரால் கூறப்பட்டது?

- மாதவியால்

ஆ. நடந்தாய் என விளிக்கப்படுவது யார்?

- காவிரி

**10. நின் கணவன் நாம வேலின் திறங் கண்டே**
**அறிந்தேன் வாழி காவேரி..**

அ. நாம வேல் என்பதன் பொருள் யாது?

- அச்சம் தரும் வேல்

ஆ. இங்கு கணவன் எனப்பட்டது யார்?

- சோழ மன்னன்.

**10. ஆழியாள்வான் பகல்வெய்யோன் அருளே வாழி காவேரி..**

அ. ஆழியாள்வான் என்பதன் பொருள் யாது?

- ஆணைச்சக்கரத்தை உடையவன்.

ஆ. பகல்வெய்யோன் என இங்கு சுட்டப்படுபவன் யார்?

- சோழ மன்னன்

**❁ கட்டமைப்பு வினாக்கள்**

**01.கானல் வரியில் சோழமன்னனின் சிறப்பு பற்றி எடுத்துரைக்க?**

இப் பகுதியில் சோழ மன்னனின் சிறப்புக்களை நோக்கும் போது,

→ மாலை அணிந்த முழுமதி போன்றவன்

→ வெண்கொற்றக் குடையினை உடையவன்

→ நிலைத்த புகழ் எனும் மாலை அணிந்தவன்

→ சோழ நாட்டினை ஆட்சி செய்தவன்

→ நீதி தவறாது செங்கோல் செலுத்தி ஆட்சி செய்பவன்

→ போர் ஒழுக்கத்தினை உடையவன்

→ வளையாத செங்கோலை கொண்டிருப்பவன்

→ பகைவர்க்கு அச்சத்தை தருகின்ற வேலைக் கொண்டிருப்பவன்

→ உயிர்களைப் பாதுகாக்கும் ஆணைச் சக்கரத்தை உடையவன்

→ சூரிய குலத்தில் பிறந்தவன்

→ நடு நிலைமை தவறாத ஆட்சித் தன்மை உடையவன்

**02. காவேரியின் வளம் அல்லது சிறப்புக் குறித்து விளக்குக?**

கானல் வரி எனும் பகுதியில் காவேரி நதியின் வளம் குறித்து பின்வருமாறு நோக்கலாம்.

→ புதுப்புனலாக பெருகி வந்து உழவர்களின் மகிழ்ச்சிக்கு காரணமாக அமைந்தமை

→ கரைகளையும், வரம்புகளையும் உடைத்துக் சென்று பாய்கின்ற தன்மையைக் கொண்டிருத்தல்

→ இரு பக்கமும் வண்டுகள் ஒலிக்க அழகிய புவாகிய ஆடை போர்த்து கரிய கயல் போன்ற கண்களை விழித்து அசைந்து நடத்தல்

→ சோழ நாட்டினை மகவாகக் கருதி அதை வளர்க்கும் தாயாக விளங்குதல்

→ ஊழிக்கால முடிவு வரை சோழ நாட்டினை தன் நீர்வளத்தினால் பாதுகாத்தல்

குறிப்பாக காவேரியை பெண்ணாக உருவகித்து அதன் சிறப்புக்களைப் பாடியிருப்பது இங்கு நயத்தலுக்குரியதாகும்.

**03. சோழ மன்னனின் நிலை பேறுடைய ஆட்சிக்கு காரணம் யாதென குறிப்பிடப்படுகின்றது?**

**சோழ மன்னனின் நிலை பேறுடைய ஆட்சிக்கு துணை புரியும் காரணங்களாக,**

**→ அரணிடத்தில் காவல் செய்யும் வீரர்களின் போர் ஒழுக்கத்தினை உடையவன்**

**→ பகைவர்க்கு அச்சம் தருகின்ற வேலினைக் கொண்டிருப்பவன்**

**→ சூரிய குலத்தில் தோன்றியவன்**

**→ நாட்டில் உள்ள உயிர்களைப் பாதுகாக்கும் ஆணைச் சக்கரத்தை உடையவன்**

**→ வளையாத செங்கோலைக் கொண்டு நீதி தவறாத முயைில் ஆட்சி புரிபவன்**

**இவையனைத்தும் சோழ மன்னனின் நிலை பேறான ஆட்சிக்கு காரணங்களாகும்.**

## தெளிவு – சிறுகதை

**(அலகு – 02)**

**1. தெளிவு எனும் சிறுகதையின் ஆசிரியர் யார்?**

- மு. பஷீர்

**2.பாருக் நானா எனக்கு கடிதமீக்கியா?.. இக் கூற்று யாரால் கூறப்பட்டது?**

- நிஷ்தார்

**3. ஒன்ன பஜாரில பாத்தன் காணல்ல. ஒனக்கு வெளிநாட்டுக் கடிதமொண்டு இருக்கி..**

**அ. இக் கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?**

- பாருக் நானாவால் நிஷ்தாருக்கு

**ஆ. பஜார் என்பதன் தமிழ் வடிவம் யாது?**

- நகரம்

**4.நிஷ்தாரு ஒரே தல சுத்தா..யிருக்குப்பா.. வெலனலயிருந்து ஒண்டும் தின்னவுமில்ல..**

**அ. இக் கூற்றினை உரைத்தது யார்?**

- பாருக் நானா

**ஆ. இவ்வடிகளில் புலப்படும் உணர்வு யாது?**

- சோக உணர்வு, கவலை உணர்வு

**5. குளிர் காற்றும் குமைந்த மேகத்திட்டுக்களும் மழை வர்சிப்புக்கு குறியீடு காட்டின..**

**அ. இக் கூற்று இடம் பெறும் சிறுகதை யாது?**

- தெளிவு

**ஆ. மழை வருவதற்கான அறிகுறிகளாக காட்டப்படுபவை எவை?**

- குளிர் காற்று, மேகத்திடல்

**6. வறுமைத் தூரிகை வரைந்த கோலங்கள் முதுமை முகத்தில் சோகங்களாய் முட்டித் தெறித்தன...**

**அ. இவ்வடிகளின் ஊடாக யாருடைய தோற்றம் புலப்படுகின்றது?**

- மைமூன் கிழவி

**ஆ. முதுமையான முகத்தில் வெளிப்பட்டு நிற்பவை எவை?**

- வறுமையின் தூரிகை வரைந்த கோலங்கள்

## ❀ கட்டமைப்பு வினாக்கள்

### 01. தெளிவு சிறுகதையில் பாரூக் நானாவின் ஏழ்மை/தபால்காரனின் வறுமை நிலை எவ்வாறு காட்டப்படுகின்றது?

இச் சிறுகதையில் பிரதான கதாபாத்திரமாக உலா வரும் தபால்க் காரன் பாரூக் நானா ஏழ்மை குடி கொண்ட பாத்திரமாக சித்தரிக்கபட்டுள்ளான். அவனது ஏழ்மை நிலை குறித்து நோக்குமிடத்து,

→ பழைய சைக்கிளில் பயணித்து தபால்களை விநியோகம் செய்தல்

→ உச்சி வெய்யிலில் உடல் வெப்பத்தால் சூடேறுதல்

→ உடலை வியர்வை நனைத்திட தபால்க் கட்டுக்களுடன் பயணித்தல்

→ நேரத்திற்கு உணவு உண்ண முடியாத நிலை– பசி மிகுதியால் நிஷ்தாரிடம் தன் நிலையை உரைத்தல்

→ எதிலுமே பிடிப்பில்லாத ஒருவித மலட்டுச் சோகம் குடி கொண்டிருத்தல்

→ அவனது ஏழ்மை காரணமாக குடும்பத்தில் விரிசல் விழுதல், முக முறிவுகள் ஏற்படுதல்

→ உறவினர் வீட்டு கலியாணத்திற்கு போவதற்கு ஆயிரம் ரூபாய் வேண்டும், இப்ப வசதியில்லை. கடன் கேட்கவும் யாருமில்லை என ஆதங்கம் கொள்ளுதல்

→ பிறருடைய கடிதத்தைப் பிரித்து அதனுள் இருக்கும் பணத்தை எடுக்க முடிவு செய்தல் ஏழ்மையில் உச்ச கட்டமாகும்.

### 02. கிராமம் பற்றி வர்ணிப்பின் தன்மையினை எடுத்துரைக்க?

இச் சிறுகதை ஒரு கிராமத்தினை கதைக் களமாகக் கொண்டு அமைந்துள்ளது. ஆக கிராமம் குறித்த வர்ணிப்பு இங்கு சித்திரிக்கப்பட்டுள்ளது.

→ மரங்கள் சூழ்ந்துள்ள இயற்கையான கிராமம்

→ செம் மண் நிறைந்த பாதைகளில் மேடு, பள்ளங்கள் காணப்படுதல்

→ விழுது பரப்பி நிற்கும் ஆலமரம் காணப்படுதல்

→ குச்சில் வீடுகள் காணப்படுதல் அத்தோடு தேனீர்க் கடைகள் உள்ளமை

→ மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலை காணப்படுதல்

→ இறை வழிபாட்டிற்கான பள்ளி வாசல் காணப்படல்

→ கால்நடைகள் உலாவித் திரிதல்

→ கடிதத் தொடர்புகள் கொண்ட மக்கள் வாழுதல்

→ பிரயாணத்திற்காக சைக்கிள் பயன்படுத்துதல்

**03. குடும்ப வாழ்வின் இன்ப துன்பங்கள் பற்றி கூறப்படுவனவற்றை குறிப்பிடுக?**

இச் சிறுகதையில் குடும்ப வாழ்வில் ஏற்படும் இன்ப துன்பங்கள் குறித்து நோக்குமிடத்து,

→ பாரூக் நானாவின் குடும்பத்தில் சில முரண்பாடுகள் ஏற்படுகின்றன. பொருளாதாரமே அதற்குரிய காரணமாக விளங்குதல்

→ உறவினரின் திருமண வீட்டிற்கு செல்வதற்கு பணமின்மையால் கணவன், மனைவிக்கிடையில் மனக் கசப்பு ஏற்படுதல்.

→ பின் ஒருவாறு மனைவி மனம் மாறி விடுவதால் குடும்பத்தில் இன்பம் குடிகொள்ளுதல்

உதாரணம் – கலியாண வீட்டிற்கு பிறகு ஒரு நாளைக்கு போகலாம் என மனைவி கூறுதல்

→ மைமூன் கிழவியின் துயரம் தோய்ந்த முகம், குழந்தைகளின் பசித் துயரத்தை பாரூக்கிடம் கூறுதல் துன்பத்தின் வெளிப்பாடாகும்.

**04. சிறுகதை ஆசிரியரின் மொழிநடைச் சிறப்புக்கள் பற்றிக் குறிப்பிடுக?**

தெளிவு எனும் இச் சிறுகதை ஆசிரியர் வர்ணிக்கும் ஆற்றல் படைத்தவராக சிறுகதையில் சிறந்த மொழிநடையினைக் கையாண்டுள்ளார் என்பதை பின்வருமாறு காண முடியும்.

→ கிராமியச் சூழல் ஒன்றினை கதைக்களமாகக் கொண்டு சிறுகதையின் ஆரம்பம் முதல் முடிவு வரை கதையை நகர்த்தியிருத்தல்

→ கிராமம் பற்றிய பல இயற்கை வர்ணிப்புக்களை சிறுகதையில் காண்பித்திருத்தல்

→ தபால்காரன் எனும் கதாபாத்திரத்தை பிரதான பாத்திரமாகக் கொண்டு கதையை கொண்டு செல்லுதல்

→ கதாபாத்திரங்களுக்கு இடையிலான பிரதேச பேச்சு வழக்கில் அமைந்த உரையாடல் அமையப் பெற்றிருத்தல்

→ கதையின் ஆசிரியரே பிரதான கதை சொல்லியாக சிறுகதையில் வலம் வருதல்

→மண் வாசனை வீசும் வகையில் சிறுகதையில் ஒவ்வொரு கட்டத்தையும் கொண்டு செல்லுதல்

→ பிரதேச பேச்சு வழக்குச் சொற்களை அதிகமாக சிறுகதையில் இடம்பெற்றிட செய்திருத்தல்

→ பொருத்தமான தலைப்பினை சிறுகதைக்கு இட்டு கதையை பொருத்தமாக முடித்திருத்தல்

# காலம் தோறும் அகம்

**(அலகு 03)**

## பாடல் 1 – சங்ககாலம்

**சுனைப் பூக் குற்றுத் தொடலை தைஇப்**
**புனக்கிளி கடியும் பூங்கட் பேதை**
**தானறிந்தனளோ இலளோ பானாள்**
**பள்ளி யானையின் உயிர்த்தென்**
**உள்ளம் புன்னுந் தன்னுழை அதுவே**

**1. இப்பாடலைப் பாடியவர் யார்?**

- கபிலர்

**2. பாடல் இடம் பெறும் திணை யாது?**

- குறிஞ்சி

**3. இப் பாடல் இடம்பெறும் நூல் யாது?**

- குறுந்தொகை

**4. சுனைப் புக் குற்றுத் தொடலை**
**புனக்கிளி கடியும் புங்கட் பேதை..**

**அ. தொடலை என்றால் என்ன?**

- மாலை

**ஆ. பூங்கட் பேதை என்பதன் பொருள்?**

- **பூப் போன்ற அழகிய கண்களை உடைய பெண்**

**5. பானாள் பள்ளி யானையின் உயிர்த்தென்**
**உள்ளம் பின்னுந் தன்னுழையதுவே..**

**அ.பானாள் பள்ளி யானை என்பதன் கருத்து யாது?**

- நடுச்சாமத்தில் துயில் கொள்ளும் யானை

**ஆ. இக் கூற்றினை உரைத்தது யார்?**

- **தலைவன்**

**6. இப் பாடலில் தலைவனது காதல் வெளிப்பாட்டினை எடுத்துரைக்க?**

- **காதலியின் நினைவில் இருக்கும் தலைவன் நடுச்சாமத்தில் துயில் கொள்ளும் யானையைப் போல பெருமூச்சு விட்டேன், தன்னுடைய உள்ளம் மீண்டும் அவளிடமே சென்று விட்டது என்கின்றான்.**

**7. தலைவியின் அழகு எவ்வாறு காட்டப்படுகின்றது?**

- **பூவினைப் போன்ற அழகிய கண்களை உடையவள்**

**8. பாடலில் பயிலப்படும் உவமையணியினை குறிப்பிட்டு விளக்குக?**

நடுச்சாமத்தில் துயிலும் யானையைப் போல பெருமூச்சு விடும் தலைவன்

| | |
|---|---|
| உவமானம் | – நடுச்சாமத்தில் துயிலும் யானை |
| உவமேயம் | – பெருமூச்சி விடும் தலைவன் |
| பொதுத்தன்மை | – பெருமூச்சு விடுதல் |

## பாடல் 02. - சங்கமருவிய காலம்

***சிரல்வாய் வனப்பினவாகி நிரலொப்ப***
***ஈர்த்தண் தளவம் தகைந்தன சீர்த்தக்க***
***செல்வ மழை மதர்க் கண் சின் மொழிப் பேதை ஊர்***
***நல் விருந்தாக நமக்கு***

**1. இப் பாடலைப் பாடியவர் யார்?**

- மதுரைக் கண்ணங் கூத்தனார்

**2. பாடல் இடம் பெறும் திணை யாது?**

- முல்லை

**3. இப் பாடல் இடம்பெறும் நூல் யாது?**

- கார்நாற்பது

**4. சிரல்வாய் வனப்பினவாகி நிரலொப்ப**
**ஈர்த்தண் தவளம் தகைந்தன..**

அ. தவளம் எனப்படுவது இங்கு யாது?

- செம்முல்லைப் பூக்கள்

ஆ. சிரல் எனக் குறிக்கப்படுவது யாது?

- சிச்சிலிக் குருவி

**5. மழை மதர்க் கண் சின்மொழிப் பேதையூர்**
**நல் விருந்தாக நமக்கு..**

அ. இவ்வடிகளில் புலப்படும் அணி யாது?

- உவமையணி

ஆ. இக் கூற்று யாரால் உரைக்கபட்டது?

- தலைவனால்

**7. இப் பாடலில் புலப்படும் தலைவனது காதல் வெளிப்பாட்டினை எடுத்துரைக்க?**

- தலைவன் ஒருவன் தன் காதலியின் ஊர் வழியாக பயணிக்கின்றான். காதலி மீதான காதலால் சிறந்த செல்வத்தையும், மழை போலும் குளிர்ந்த கண்களையும், சிலவாகிய மொழிகளையும் பேசுகின்ற தன் காதலியின் ஊரானது நல் விருந்து தரும் இடமாக அமையட்டும் என உரைக்கின்றான் தலைவி.

**6. தலைவியின் அழகு எவ்வாறு காட்டப்படுகின்றது?**

- மழை போன்ற குளிர்ச்சியான கண்களையும், சிலவாகிய மொழிகளைப் பேசுகின்றவள்

**<u>பாடல் 03 – பல்லவர் காலம்</u>** <u>(நாச்சியார் திருமொழி பாடல்)</u>

**மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத**
**முத்துடை தாமம் நிரை தாழ்ந்த பந்தற் கீழ்**
**மைத்துனன் நம்பி மதுசூதன் வந்தென்னைக்**
**கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன் தோழி நான்**

**1. இப் பாடலைப் பாடியவர் யார்?**

- ஆண்டாள்

**2. பாடல் இடம் பெறும் திணை யாது?**

- கைக்கிளை

**3. முத்துடை தாம நிரை தாழ்ந்த பந்தற் கீழ் மைத்துனன்..**

**அ. முத்துடை தாமம் என்பதன் கருத்து யாது?**

- முத்துக்களால் ஆன மாலை

**ஆ. மைத்துனன் எனப்பட்டவன் யார்?**

- கண்ணன்

**4. மைத்துனன் நம்பி மதுசூதன் வந்தென்னைக் கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன் தோழி நான்..**

அ. கைத்தலம் பற்றுதல் என்பதன் கருத்து யாது?

- திருமணம் செய்தல்

ஆ. இக் கூற்றினை உரைத்தது யார்?

- ஆண்டாள்

**6. ஆண்டாள் நாச்சியார் கூறும் திருமணச் சடங்கினை எடுத்துரைக்குக?**

- **இப் பாடலில் ஆண்டாள் நாச்சியார் கூறிடும் திருமணச் சடங்கு பற்றி நோக்கும் போது,**

→ மத்தளம் முதலிய வாத்தியங்கள் முழங்குதல்
→ வரிகளை உடைய சங்குகள் ஒலித்தல்
→ முத்துக்களை உடைய மாலைகள் வரிசையாக தொங்குதல்
→ அழகிய பந்தல் அமைத்திருத்தல்
→ கண்ணன் வந்து கைத்தலம் பற்றுதல்

**என்பன ஆண்டாள் நாச்சியார் கூறும் திருமணச் சடங்கின் அம்சங்களாகும்.**

**<u>பாடல் 04– சோழர் காலம்</u>**

**உள்ளம் போய் நாண் போய் உரைபோய் வரிநெடுங்கண்**
**வெள்ளம் போய் வேகின்ற மென்தளிர் போல் பிள்ளை மீன்**
**புள்ளரிக்கும் நாடன் திருமடந்தை பூவாளி**
**உள்ளரிக்கச் சோர்ந்தாள் உயிர்**

**1. இப் பாடலைப் பாடியவர் யார்?**

- புகழேந்தி

**2. இப் பாடல் இடம்பெறும் நூல் யாது?**

- நளவெண்பா

**3. பிள்ளை மீன் புள்ளரிக்கும் நாடன் திருமடந்தை**
**பூவாளி உள்ளரிக்க சோர்ந்தாள் உடல்...**

அ. நாடன் எனப்படுபவன் யார்?

- வீமன்

ஆ. திருமடந்தை எனப்படுபவது யார்?

- தமயந்தி

இ. பூவாளி என்பதால் நீர் விளங்குவது யாது?

- மலரம்புகள்

**4. தமயந்தியின் காதல் வெளிப்பாடு எவ்வாறு புலப்படுகின்றது?**

- நளன் மீது காதலுற்ற தமயந்தியானவள் மன்மதனுடைய மலரம்புகள் உள்ளத்தில் பாய்ந்து தன்னைத் தாக்கிட, தன் உள்ளமும், தன் வெட்கமும், நளனிடம் சென்று விட சோர்வடைந்து செம்மையான கோடுகளையுடைய நீண்ட கண்களிலிருந்து நீரானது ஊற்றாக ஓட நெருப்பில் கிடந்து வேகுகின்ற மெல்லிய தளிர் போல ஆவி தளர்ந்து சோர்வுற்றாள் தமயந்தி என புகழேந்தி தமயந்தியின் காதல் குறித்து கருத்துரைக்கின்றார்.

## <u>பாடல் 05- நாயக்கர் காலம்</u>

**நேற்றிரா வந்தொருவன் நித்திரையில் கை பிடித்தான்**
**வேற்றூரான் என்று விடாயென்றேன் ஆற்றியே**
**க(கா)ஞ்சி குடியென்றான் களி(த்)தின்று போவென்றேன்**
**வஞ்சியரே சென்றான் மறைந்து**

**1. இப் பாடலைப் பாடியவர் யார்?**

- காளமேகப் புலவர்

**2. இப் பாடல் இடம்பெறும் நூல் யாது?**

- தனிப்பாடல்

**3. இப் பாடல் தோன்றி காலப்பகுதி யாது?**

- நாயக்கர் காலம்

**4. இப் பாடலில் புலப்படும் அணி யாது?**

- சிலேடையணி

**5. ஆற்றியே கஞ்சி குடியென்றான்**
**களித்தின்று போவென்றேன்..**

அ. இங்கு கஞ்சி குடி என்பதன் இரு பொருளும் யாவை?

- கஞ்சி குடி – காஞ்சியில் குடியிருப்பவன்
- கஞ்சி குடி – கஞ்சி குடித்தல்

## 6. இப்பாடலில் புலப்படும் காளமேகப் புலவரது கவித்துவம் பற்றி எடுத்துரைக்க?

● இப் பாடலில் காளமேகத்தாரின் கவிச் சிறப்பினை நோக்கும் போது, பெண் ஒருத்தி ஏகாம்பரநாதராகிய சிவபெருமான் மீது காதலுற்றாள். அவ்வாறு தன் கனவில் சிவபெருமான் வந்து தன் கரம் பற்றியதை தன் தோழிக்கு எடுத்துரைக்கின்றாள். அதனை காளமேகப் புலவர் சிலேடைத் தன்மையின் வாயிலாக இரசனையோடு பாடல் தந்துள்ளார்.

அதாவது,நேற்றிரவு ஒருவன் என் கனவில் வந்து என் கைப்பிடித்தான். நான் யாரோ அந்நியன் என நினைத்து கையை விடு என்றேன். அவனோ என் கோபத்தை தணித்து நான் காஞ்சியில் குடியிருப்பவன் என்றான், அது நான் விரும்புபவன் என மகிழ்ந்து என்னுடன் மகிழ்ந்து இருந்து விட்டுப் போ என்றேன். அப்போது அவனோ மறைந்து சென்று விட்டான். இதனை சிலேடையில் மற்றொரு பொருள் தரும்படியாகவும் கவி வடித்துள்ளார் காளமேகப் புலவர்.

## 07. காலம் தோறும் அகம் எனும் பாடப்பகுதியில் தெய்வீகக் காதல், மானிடக் காதல் பற்றிய வெளிப்பாட்டினை விபரிக்குக?

காலம் தோறும் அகம் எனும் பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள பாடல்களின் வாயிலாக தெய்வீகக் காதல் மற்றும் மானிடக் காதல் வெளிப்பாட்டினை கண்டு கொள்ள முடிகின்றது.

**● <u>தெய்வீகக் காதல் வெளிப்பாடு</u>**

இப் பகுதியில் பல்லவர் காலத்திற்குரிய <u>மத்தளம் கொட்ட..</u> மற்றும் நாயக்கர் காலத்திற்குரிய <u>நேற்றிரா வந்தொருவன்..</u> எனும் இரு பாடல்களும் தெய்வீகக் காதலின் வெளிப்பாடாகும்.

<u>❖ மத்தளம் கொட்ட.. - பல்லவர் காலம்</u>

→ ஆண்டாள் கண்ணன் மீது காதல் வயப்படுதல்
→ கண்ணன் தன் கனவில் வந்து கைத்தலம் பற்றுதல் எனக் கூறுதல்
→ திருமணத்திற்கான சடங்கு முறைகளைக் கூறுதல்

<u>❖ நேற்றிரா வந்தொருவன் - நாயக்கர் காலம்</u>

→ பெண்ணொருத்தி சிவபெருமான் மீது காதல் கொள்ளுதல்
→ தன் கனவில் சிவன் வந்து தன் கரம் பிடித்ததாக உரைத்தல்
→ தன் காதலனை தன்னுடன் இருந்து விட்டு போ எனக் கூறியதாக உரைத்தல்

**● <u>மானிடக் காதல் வெளிப்பாடு.</u>**

இப் பகுதியில் சங்க காலப் பாடல், சங்கமருவிய காலப் பாடல், சோழர் காலப் பாடல் ஆகிய மூன்று பாடல்களும் மானிடக் காதலின் வெளிப்பாடாகும்.

<u>❖ சுனைப் பூக் குற்றுத் தொடலை..- சங்ககாலம்</u>

→ தலைவி மலர்களைப் பறித்து மாலை தொடுத்தல்
→ திணைப் புலத்தை தலைவி காவல் காத்து நிற்றல்
→ திணைப் பயிரை கொத்த வரும் கிளிகளை விரட்டுதல்
→ தலைவன் அவள் மீது காதல் கொள்ளுதல்
→ தலைவியின் நினைப்பினால் இரவில் துயில் கொள்ளாமை
→ நடுச் சாமத்தில் பெருமூச்சு விடும் யானையைப் போல தலைவன் பெருமூச்சு விடுதல்
→ மீண்டும் தலைவனின் உள்ளம் தலைவியிடம் சென்றுவிடல்

**ஃ சிறல்வாய் வனப்பினவாகி நிரலொப்ப.. – சங்கமருவிய காலம்**

→ தலைவியின் ஊர் வழியாக தலைவன் தேரில் வருதல்
→ தலைவியின் ஊர் செல்வச் செழிப்புடன் காட்சி தருதல்
→ மழை போன்ற குளிர்ந்த கண்களை உடையவளும், சிலவாகிய மொழிகளைப் பேசுகின்ற தலைவியின் அவ் ஊர் இன்பம் தருவதாக அமையட்டும் எனத்தலைவன் தோழனுக்கு உரைத்தல்

**● உள்ளம் போய் நாண் போய்.. – சோழர் காலம்**

→ தமயந்தி நளன் மீது காதலுற்று அவன் நினைவால் வருந்துதல்
→ நளன் மீது கொண்ட காதலால், தன் உள்ளத்தை பறி கொடுத்து, நாணத்தை இழந்து, வார்த்தைகள் இழந்து, கண்களில் நீரானது வெள்ளமாக பாய்ந்தோடிட நெருப்பிலே அகப்பட்டு வேகுகின்ற மென்மையான தளிரினைப் போல வருந்தித் துடித்தல்

✿✿✿✿✿

மாணவர் கவனத்திற்கு – கட்டமைப்பு வினாக்களுக்குரிய விடைகள் உங்களது கற்றலுக்கு இலகுவாக தனித்தனி குறிப்புக்களாக எழுதப்பட்டுள்ளன. ஆனால் நீங்கள் விடைகளை எழுதும் போது பந்தியமைப்பில் எழுத வேண்டும் என்பதை கவனத்தில் கொள்ளவும்

# காலம் தோறும் அகம் - வைரமுத்து கவிதைகள்

**சங்ககாலம்**

ஆற்றுத் தூ நீர் ஆரல் உண்டு
குருகு பறக்கும் தீம்புனல் நாடன்
கற்றை நிலவு காயும் காட்டிடை
என்கை இலங்கு வளை நெகிழ்ந்து
மேனி வியர்ப்ப மெல்லிடை ஒடித்து
வாட்கண் மயங்க உண்டதை மீண்டும்
பசலை உண்ணும் பாராய் தோழி

**சங்கமருவிய காலம்**

பொன்னங் கொடியென்பார் போதலரும் பூவென்பார்
மின்னல் மிடைந்த இடையென்பார் இன்னும்
சுரும்பிருக்கும் கூந்தல் சுடர்தொடி உன் சொல்லில்
கரும்பிருக்கும் என்பார் கவி

**பல்லவர் காலம்**

வெண்ணிலவால் பொங்கிதியோ விரகத்தால் பொங்கிதியோ
பெண்ணொருத்தி நான் விடுக்கும் பெரு மூச்சால் பொங்கிதியோ
பண்ணளந்த பால் வண்ணன் பள்ளி கொண்ட பான்மையினால்
விண்ணளந்து பொங்கிதியோ விளம்பால் பாற் கடலே

**சோழர் காலம்**

தூக்கி நிறுத்தி வைத்த கொண்டையாள்
மனம் துள்ளி ஓடும் விழிக் கெண்டையாள்
நெஞ்சைத் தாக்கி மறு நொடியில் தவிடு பொடியாக்கும்
சண்டையாள் வெள்ளித் தண்டையாள்
முலை அதிரும் படி மணி உதிரும் படி மனம் பதறும் படி
ஆடும் பாவையாள் வில் மாரன் பகை முடிக்கத் தேவையாள்

**நாயக்கர் காலம்**

சின்னஞ்சிறு கமலப் பூவினாள் என் சித்தத்திலே வந்து மேவினாள்
கண்ணில் ஜோதி ஒன்று காட்டினாள் என் கவியில் காதல் ரசம் ஊற்றினாள்
விண்ணில் நிலவெரியும் வேளையில் பொன் வீணை கரம் கொண்டு மீட்டினாள்
மண்ணில் விண்ணகம் காட்டியே அவள் மறைந்த கதை எங்கு சொல்குவேன்

**திராவிட காலம்**

இல்லாத கடவுள் போன்ற இடை கொண்ட பெண்ணே
உந்தன் பொல்லாத அழகு பாட
பூவோடும் கூந்தல் பாட சல்லாப விழிகள் பாட
தனித் தமிழ் கொண்டு வந்தேன்
நில்லாமல் போனால் கூட்டில் நிற்குமோ எந்தன் ஆவி?

# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## இடர் விடுமுறைக்கால சுயகற்றலுக்கான செயலட்டை – 2020

## தரம் - 11 | தமிழ் இலக்கிய நயம்

பெயர் / சுட்டெண் : .....................

திருமதி.த.செந்தில்ராஜா B.A, PGDE

### பகுதி – 1

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01.

I. புத்தகசாலை எனும் கவிதைத் தொகுப்பின் ஆசிரியர் யார்?

..............................................................................................

II. அவரது இயற்பெயர் யாது? அவரது ஏனைய படைப்புக்களைத் தருக?

..............................................................................................

..............................................................................................

III. இக் கவிதைத் தொகுப்பில் வரும் அணிகளை விளக்குக?

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

02.

I. பத்தி எழுத்துக்கள் என்றால் என்ன? இக் கட்டுரையின் ஆசிரியர் யார்?

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

II. மரம் என்பது உயர்திணை என்பதற்கு கவிஞர் கூறும் கருத்துக்களைப் பட்டியற்படுத்துக?

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

III. மென்மையே வாழும் எனும் கட்டுரையில் மென்மையானவை எவை என்று கூறப்படுகின்றது?

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

03.

I. நாட்டார் பாடல்கள் என்பதன் மறுபெயர்களைத் தருக?

..............................................................................................

..............................................................................................

II. மருத்துவிச்சி என்பவர் யார்? அவளுடைய மனப்பாங்கு எத்தனையது?

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

III. பின்வரும் உறவுமுறைகள் யார் யாரைக் குறிக்கின்றன?

கோச்சி – பொப்பர் : ……………………………………………………………………
கொம்மான் - மாமி : ……………………………………………………………………
பேத்தி – பேரன் : ………………………………………………………………………
ஆச்சி – அப்பு : …………………………………………………………………………

04.

I. முளிதயிர் பிசைந்து எனும் பாடலைப் பாடியவர் யார்? அப்பாடல் யாருடைய கூற்று?
………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………

II. இப் பாடலில் வரும் தலைவன் தலைவியின் இல்லறப் பாங்கை விளக்குக. கடிநகர் என்பது யாது?
………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………

III. அமுதம் எனும் கவிதையில் மனைவி சமைத்த உணவைக் கணவன் எவ்வாறெல்லாம் புகழ்கின்றான்?
………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………

05.

I. தாய்ப்பசு என்ற சிறுகதையின் ஆசிரியர் யார்? அவரது ஏனைய ஆக்கங்களையும் அவருக்கு கிடைத்த விருதுகளையும் தருக?
………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………

II. இச் சிறுகதைக்கும் தலைப்புக்கும் இடையிலான தொடர்புகளை எடுத்துக் காட்டி மனிதர்களை விட விலங்குகளும் ஜீவகாருண்யம் மிக்கவை என்பதை விளக்குக.
………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………

06.

I. கிட்கிந்தைப் படலத்தின் ஆசிரியர் யார்? அவருடைய ஏனைய நூல்களைத் தருக?
………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………

II. இராமன் சுக்கிரீவன் குறித்து ஆவேசப்பட்டமைக்கான காரணம் யாது?
………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………

III. இக் கவிதையில் வரும் அணிகளை விளக்குக?

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

07.

I. கானல் வரியில் சோழமன்னனின் பெருமைகளை எடுத்துக் காட்டுக.

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

II. காவேரி நதியின் வளம் எவ்வாறு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது?

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

III. இப்பாடலில் வரும் அணிப் பயன்பாட்டை விளக்குக?

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

08.

I. தெளிவு என்ற சிறுகதையின் மூலம் தபாற்காரனின் குணப்பண்பை விளக்குக.

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

II. இச் சிறுகதையின் மூலம் குடும்ப வாழ்வின் இன்ப துன்பங்களைக் கதாசிரியர் எவ்வாறு எடுத்துக் காட்டியுள்ளார்?

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

09.

I. காலந்தோறும் அகம் எனும் கவிதைத் தொகுப்பில் “சுனைப்பூக் குற்றுத் தொடலை” எனும் கவிதையின் ஆசிரியர், திணை, துறை என்பவற்றைத் தருக?

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

II. “சிரல்வாய் வனப்பின்வாகி” எனும் கவிதையின் ஆசிரியர், திணை, துறை என்பவற்றைக் குறிப்பிடுக?

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

III. கைக்கிளை என்றால் என்ன?

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

10.

I. நாச்சியார் திருமொழியில் கூறப்பட்ட திருமணக் கிரியை பற்றி விபரிக்க.

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

II. நளவெண்பாவின் ஆசிரியர் யார்?

..........................................................................................

..........................................................................................

III. “நேற்றிரா வந்தொருவன் நித்திரையிற் கைப்பிடித்தல்” எனும் பாடலில் வரும் சிலேடை அணியை விளக்குக.

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

***